
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1072

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

96

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




## நீதிக்கட்சியைப் பலப்படுத்த தீர்மானித்த பெரியார்!

சட்டமன்றத் தேர்தலில் தோல்வி கண்டு, பெரும் சரிவைச் சந்தித்திருந்த நீதிக்கட்சியைத் தூக்கி நிறுத்தும் பெரும் பொறுப்பை, பெரியாரும் சுயமரியாதை இயக்கமும் ஏற்றுக் கொண்டிருந்தது என்பதை உணர்த்தும் மற்றொரு மாநாடாக, 'விருதுநகர் சுயமரியாதைத் தொண்டர் மாநாடு' அமைந்தது. 13.10.1935 அன்று நடைபெற்ற இம்மாநாட்டில், பலரது பேச்சும் நீதிக்கட்சியின் நிலைமை குறித்தே இருந்தது. தீர்மானங்களும் நீதிக்கட்சியைப் பலப்படுத்துவது குறித்த சிந்தனையையே வெளிப்படுத்தின.

அன்று காலையில் ஈரோடு, சேலம், திருச்சி, தஞ்சை, வட ஆற்காடு, தென்னாற்காடு மதுரை, சென்னை, நெல்லை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக் கானோர் ரயிலில், விருதுநகர் வந்திருந்தனர். மாலையில் பாண்டு வாத்தியங்கள் முழங்க, மக்கள் கூட்டத்தின் நடுவே பேரணி தொடங் கியது. தந்தை பெரியார், டி.எம்.ஜம்புலிங்கம், கே.கே.ஏ.பெரியசாமி, கே.எம்.பாலசுப்ரமணியம், வி.ஏ.எம்.வெள்ளையப்பன் ஆகியோர் இரட்டை குதிரைகள் பூட்டப்பட்ட சாரட்டில் மாநாட்டுப் பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னால் எண்ணற்ற வாகனங்களில் பலர் வருகை தந்தனர். மாநாட்டு நிகழ்விடத்துக்கு பெரியார் வந்தவுடன் 'ஜே' என்ற முழக்கம் நாலாப்புறமும் எதிரொலித்தது.

முதலில், கே.எம்.பாலசுப்ரமணியம் ஜஸ்டிஸ் கொடியை ஏற்றிவைத்தார். சி.டி. நாயகம் மாநாட்டைத் தொடங்கிவைக்க, வெள்ளையப்பன் வரவேற்புரை வாசித்தார். "15 ஆண்டுக்காலம் அரசாங்க நிர்வாகத்தில் பெரும் பொறுப்பை ஏற்று நடத்திவந்த நமது கட்சியானது பிரச்சாரக் குறைவாலும், தலைவர்களின் அசிரத்தையாலும் சென்ற சட்டசபைத் தேர்தலில், மிகவும் கேவலமான தோல்வியை அடைந்தது. கட்சியின் மீது உண்மையான பற்றுள்ளவர்களுக்கு இத்தோல்வி யானது கலக்கத்தை உண்டாக்கிவிட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், ஜஸ்டிஸ் கட்சியின் பிரச்சாரத்திற்கு அஸ்திவாரமா யிருக்கும் வாலிபர்கள் யாவரும் சுயமரியாதை இயக்கத்தின் குழந்தைகள் என்பதை யாரும் மறுக்க முடியாது. கட்சித் தொண்டர்கள் சங்கத்தை மதுரை மாநாட்டில் பெயரளவில் கண்டோமே ஒழிய, எவ்வித வேலைத்திட்டமும் வகுக்கவில்லை. அக்குறைபாட்டை நீக்கி, இச் சங்கத்தைப் பலப்படுத்த வேண்டு மென்பதே இம்மாநாட்டின் நோக்கம்" என வரவேற்புரையில் பலவற்றை விளக்கிப் பேசினார் வெள்ளையப்பன்.


பின்னர் திண்டுக்கல் மித்திரன், வாலையானந்தம், மகாலிங்கம், ஆறுமுகம், பட்டுக்கோட்டை வி.எஸ்.குழந்தை ஆகியோர் பாடல்களைப் பாடி உற்சாக மூட்டினர். அதன்பின்னர், மாநாட்டிற்கு தலைமை வகித்த ராவ் பகதூர் ஜம்புலிங்க முதலியார் உரை நிகழ்த்தினார். அதன்பின்னர், பெரியார் படத்தை கே.கே.ஏ.பெரியசாமி திறந்துவைக்க, பனகல் அரசர் படத்தை, பெரியார் திறந்துவைத்தார். அத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மதிய உணவாக வழக்கத்திற்கு மாறாக, லட்டு, ஜிலேபி, வடை, பாயாசத்துடன் மதிய விருந்து அளிக்கப்பட்டது. மீண்டும் மதியம் மாநாடு கூடியவுடன் பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி, உத்தண்டன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்திற்கு உறுப்பினர்களை அதிகம் சேர்ப்பது, கட்சியின் கட்டமைப்பைப் பலப்படுத்துவது குறித்தும், சம்பளத்துடன்கூடிய பிரச்சாரகர்களை நியமிப்பது பற்றியும் இம்மாநாட்டில் ஆலோ சிக்கப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், அப்போது தமிழ்நாடு வருவதாக இருந்த இராஜேந்திர பிரசாத்தை வரவேற்கக் கூடாது, அவருக்கு நிதி அளிக்கக் கூடாது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மாலையில், மழை காரணமாகப் பொது வெளியில் கூட்டம் நடைபெறாமல், அரங்கக் கூட்டத்துடன் இம்மாநாடு முடிவுற்றது.

...கூட்டம் திரளும்

## பொய்களைத் தோலுரிக்கும் 'தி கேரவன்' கட்டுரை!




ஒட்டுமொத்த வடஇந்திய செய்தி ஊடகங்களும் திருப்பரங்குன்றம் விவகாரத்தில், இந்துத்துவ சார்புடன் வெளியிட்ட செய்திகளையும் மேற் கொண்ட பரப்புரைகளையும் தோலுரிக்கும் விதமாக, விரிவான சிறப்புக் கட்டுரையை வெளியிட்டுள்ளது 'தி கேரவன்' இதழ்.

பத்திரிகையாளர் சுஜாதா அவர்களின் விரிவான பார்வையில் எழுதப்பட்டுள்ள இந்தக் கட்டுரை, ஊடகவியலாளர்கள் தங்கள் சொல்லகராதியில் இருந்து நீக்கி, மறக்க முயன்றுகொண்டிருக்கும் பக்க சார்பற்ற மற்றும் நடுநிலையான (Unbiased & Impartial reporting) பண்பு என்பதற்கு உதாரணம்.

திருப்பரங்குன்றம் மக்களே மதவாதத்தைப் புறக்கணிப்பதை, பல்வேறு கள யதார்த்தங்களைச் சான்றாகக் காட்டி எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் சமயச் சிந்தனை பரிணமித்த பின்புலத்தைத் தொட்டுக் காட்டும் இக்கட்டுரை, இந்துத்துவ சிந்தனையை வளர்க்க, ஆர்.எஸ்.எஸ்., இந்து மக்கள் கட்சி, இந்து முன்னணி போன்ற அடிப்படைவாத அமைப்புகளும் பா.ஜ.க., அ.தி.மு.க., போன்ற அரசியல் கட்சிகள் அதற்கு ஆதரவாக இயங்குவதையும் சுட்டிகாட்டுகிறது.

அரசியல் உள்நோக்கத்துடன் தீர்ப்பளித்த சுவாமிநாதனின் ஓரவஞ்சனையைக் கேள்விக்குட்படுத்துகிறது. தி.மு.க. உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு சக்திகள் இன்னும் வீரியமான மதவாதத்தை எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் கவனப்படுத்துகிறது.

மத அடிப்படைவாதிகளுக்கு இணையாக, இயக்க அரசியலை முன்னெடுக்க வேண்டிய நிலையில்தான், திராவிட இயக்கத்தால் பண்படுத்தப்பட்ட தமிழ்நாடும் இருக்கிறது என்பது, இக்கட்டுரை மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினை!

## ஃப்ளாஷ்பேக்





மு.அருண்குமார்

### என் மகனுக்கு தலைவர் சூட்டிய பெயர்!

என் மகன் பிறந்த ஒன்றரை மாதங்களில், குழந்தைக்குப் பெயர் சூட்ட, நம் கழகத் தலைவர் அவர்களிடம் தூக்கிக்கொண்டு சென்றோம். தலைவர் என் மகனை கைகளில் ஏந்தி, சிரித்துக்கொண்டே, 'நீ ரொம்ப அழகா இருக்கிறாய், அதனால உனக்கு நான், இளவழகன் என்று பெயர் வைக்கிறேன்' என முத்தமிட்டு பெயர் சூட்டினார். எனக்கும், என் அம்மா தேவி, மனைவி பவானி ஆகியோருக்கும் அன்றைய நாள் வாழ்வில் மறக்க முடியாத தருணம்.

**– மு.அருண்குமார்,**
**சமூக வலைதள தொகுதி ஒருங்கிணைப்பாளர்,**
**தகவல் தொழில்நுட்ப அணி, பெரம்பூர், சென்னை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

96

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




## அரிய ஆய்வு நூல்!

'பராசக்தி' என்றால், பரபரப்புதான். வெளியாவதற்கு முன்பும் தயாரிப்பின் போதும், வெளியான பிறகும் 'பராசக்தி' திரைப்படம் ஏற்படுத்திய பரபரப்புகள் கொஞ்சநஞ்சமல்ல. அதனால்தான் இன்றைக்கும் தமிழ் சினிமாவின் தனித்துவ அடையாளங்களில் ஒன்றாக விஞ்சி நிற்கிறது.

1952-ல் வெளியாகி பவள விழா ஆண்டை நெருங்கிக்கொண்டிருக்கும் 'பராசக்தி' குறித்து, 1,120 பக்கங்களில் மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரிய ஆய்வு நூலை, வழங்கி இருக்கிறார் எழுத்தாளர் கடற்கரய் மத்தவிலாச அங்கதம். பதிகம் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வருகையைத் திரையுலகிற்கு உணர்த்திய படங்களுள் தவிர்க்க முடியாதது 'பராசக்தி'. அதன் மூலக்கதையாசிரியரான பாவலர் பாலசுந்தரம், தீவிர திராவிடர் கழகப் பற்றாளர். அதைத் தயாரித்த பி.ஏ.பெருமாள், பெரியார் மீது மதிப்பு கொண்ட திராவிட இயக்க நலம் விரும்பிகளுள் ஒருவர். கதை-வசனம் எழுதியவர் முத்தமிழறிஞர் கலைஞர். நடித்தவர் சிவாஜி கணேசன். இயக்கியவர் கிருஷ்ணன்-பஞ்சு ஆகிய இயக்குநர்களுள் பஞ்சு பார்ப்பன வகுப்பைச் சார்ந்தவர்.

இன்றைக்கு நட்சத்திரங்களின் அணிவகுப்பு போல் தெரிந்தாலும் படக்குழுவை ஒருங்கிணைக்கவே பெரும் போராட்டம் நடந்திருப்பதை இந்நூலில் ஆவணப்படுத்தி இருக்கிறார் நூலாசிரியர்.

பாரதி, பாரதிதாசன், உடுமலை நாராயண கவி, அண்ணல்தங்கோ, கலைஞர் உள்ளிட்டோர் எழுதிய பாடல்கள் அடங்கிய படைப்பாகவும் 'பராசக்தி' விளங்கியதையும் அதன் பின்னுள்ள சுவாரசியமான காரணங்களையும் நூலாசிரியர் கவனப்படுத்தியுள்ளார்.

1952-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெளியாகி, 1953-ஆம் ஆண்டு ஜூன் வரை திரையரங்குகளை ஆக்கிரமித்த 'பராசக்தி'யைத் தடை செய்யக் கோரி, அன்றைய மெட்ராஸ் மாகாண முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரிக்கு எழுதப்பட்ட கடிதங்கள் எல்லாம், இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம், தமிழ் என இரு மொழிகளிலும் 'பராசக்தி'க்கு எதிராக கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன. தடைசெய்யக் கூடாது என ஒரு இஸ்லாமியர் எழுதிய கடிதமும் இதில் அடங்கும். 'பராசக்தி' தடை செய்யப்படும் என்ற அச்சம்தான் நிலவியதே ஒழிய, அது ஒருநாளும் தடை செய்யப்படவில்லை என்பதையும் இந்நூல் தெளிவு படுத்தியுள்ளது.

'பராசக்தியா? பாதக சக்தியா?', 'தணிக்கை போர்டு தூங்குகிறதா?' எனும் தலைப்புகளில் தேசியவாத சார்பு கொண்ட பத்திரிகைகளிடமிருந்து 'பராசக்தி'க்கு எதிராக வெளிப்பட்ட வெறுப்பும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே, பராசக்திக்காக திராவிட இயக்கத் தலைவர்களிடம் இருந்தும், பத்திரிகைகளிடமிருந்தும் வெளிப்பட்ட ஆதரவு பதிவுகளும் இதில் அடங்கியுள்ளன.

இதுவரை பொதுவெளியில் உலவாத அரசாங்க ஆவணங்கள், ராஜாஜிக்கு எழுதப்பட்ட கடிதங்களின் ஒளிநகல்கள், கேலிச்சித்திரம், பாட்டுப் புத்தகம், வசனப் புத்தகம், படத்தில் பங்காற்றிய முக்கிய ஆளுமைகளின் புகைப்படங்கள், விளம்பரங்கள், சிறப்புக் கட்டுரைகள் என இத்திரைப்படம் குறித்த முக்கிய ஆவணங்கள் அனைத்தும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன என்பது தனிச்சிறப்பு. நூல் ஆசிரியரின் பணி இணையற்றது.

பெரியார், பேரறிஞர், கலைஞர் போன்ற பதங்களுக்குப் பதிலாக அவர்களின் மூலப் பெயரை பயன்படுத்தி, பக்க சார்பற்றவராகத் தன்னை முன்னிறுத்திக்கொள்ளும் நூலாசிரியர் செட்டியார், முதலியார் போன்ற பெயர்களை இயல்பாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்திருந்தால் 'பராசக்தி' பற்றிய இந்தத் தொகுப்பு செம்மையான ஒன்றாக நிலைத்திருக்கும்.

...வாசிப்போம்.

## நம் வரலாறு

### இந்தி எதிர்ப்பு மண்டல மாநாடுகள்!

1963-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ஆம் தேதி, தஞ்சாவூரில், திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்கள் அடங்கிய, 'சோழ மண்டல இந்தி எதிர்ப்பு மாநாடு' நடைபெற்றது. செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதி நெல்லையில், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, குமரி மாவட்டங்கள் அடங்கிய பாண்டிய மண்டல இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கழகம் நடத்தியது. இரண்டு மாநாடுகளிலும் கலைஞரின் 'மாற்றான் தோட்டத்து மல்லிகை' நாடகம் நடத்தப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131